**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**
**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு IV (நிகழ் அலை ஊடானது) - 2021**

# சட்டவியல்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : **06**

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. மன்னிப்பு வழங்குவதற்கான நிறைவேற்றுத் துறையின் அதிகாரத்தின் கேள்விக்குட்படுத்தப்படாததும் மட்டுப்படுத்தப்படாததுமான தன்மையானது பல நூற்றாண்டுகளுக்கு மேலாக நீண்டகாலமாக இருந்து வருகின்ற சட்ட மற்றும் தார்மீக விவாதமொன்றினை தோற்றுவித்துள்ளது. இந்த அதிகாரமானது பயன்படுத்தப்படும் போது, நிறைவேற்றுத் துறையின் உள்ளார்ந்த நோக்கத்தினை சட்டவாக்கத்துறையோ அல்லது நீதிமன்றமோ கேள்விக்குட்படுத்த முடியாது. இலங்கையில், நிறைவேற்றுத் துறையின் மன்னிப்பு வழங்கும் அதிகாரமானது அரசியலமைப்புக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ள பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் பெறுமானம் இழக்கச் செய்யும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

    மேலுள்ள கூற்றின் பின்னணியில் பொருத்தமான சட்டவியல் கொள்கை (Theory) ஒன்றினையும் தத்துவவியலையும் ஆதாரம் காட்டி நிறைவேற்றுத் துறையின் மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரத்தின் மட்டுப்பாடற்ற தன்மைக்கு சார்பாகவும் எதிராகவும் வாதம் செய்யுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

02. Hart இனுடைய ஏற்பிற்கான விதி ( rule of recognition ) மற்றும் Kelsen இன் அடிப்படை நியம விதி *(grundnorm)* ஆகியவைகள் தொடர்பில் விமர்சன ரீதியான ஆய்வினைச் செய்வதுடன் அவ் இரு கருத்தேற்புகளுக்கும் (concepts) இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளினை மதிப்பிடுக.

03. சட்டமானது விதிகள் (rules) மற்றும் கோட்பாடுகளின் (principles) ஒத்திசைவானதும் முழுமையானதுமான முறைமையொன்று அல்ல, ஆனால் பழைய தீர்மானங்களுடன் எதிர்கால நீதிபதிகள் என்ன செய்வார்கள் என்பது தொடர்பான எதிர்வுகூறலினை உள்ளடக்கிய அனுமானங்கள் என்பதற்கு மேலாக எதுவும் இல்லை என அமெரிக்க மெய்மைவாதம் (American Realism) நம்புகின்றது.

    சட்டமானது தொலைமுன்நோக்கானது (prophecy) என நீர் கருதுகின்றீரா? மேலுள்ள கூற்றின் பின்னணியில் Justice Holmes இனால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தின் எதிர்வுகூறல் கொள்கையினை (prediction theory) விமர்சன ரீதியாக

மதிப்பிடுக. உமது விடையினை ஆதாரப்படுத்துவதற்கு எடுத்துக்காட்டுகளை வழங்க வேண்டுமென நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

04. பகுதி (அ) **<u>அல்லது</u>** (ஆ) இற்கு விடையளிக்க.

அ) தாராளவாத சட்டக் கொள்கையின் குறைபாடுகளை வெளிப்படுத்துவதில் தர்க்க சட்டக் கற்கைகள் இயக்கமானது (Critical Legal Studies school) செய்துள்ள பங்களிப்புக்களை அடையாளங் காண்க. அது அடையாளங் காண்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதில் தர்க்க சட்டக் கற்கைகள் இயக்கத்தின் வினைத்திறனை நுணுக்கமாக ஆராய்க.

ஆ) தராளவாத சட்ட முறைமையினை சவாலுக்குட்படுத்திய பெண்ணியவாத சட்ட பிரிவுகள் இரண்டினை அடையாளங்காண்பதுடன், தாராளவாத பெண்ணியவாதத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இக் கொள்கைகள்? முயற்சித்துள்ள ஏதேனும் நியாயாதிக்கத்திலிருந்தான வெற்றிகரமான இரண்டு நடைமுறை சம்பவங்களினை ஆராய்க.

05. மட்டுப்பாடற்ற தற்றுணிபொன்றினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, கடினமான வழக்குகளினை தீர்க்கும் பாரிய பொறுப்பொன்றினையே நீதிபதிகள் நிறைவேற்ற வேண்டும் என Dworkin பரிந்துரைக்கின்றார்.

நீர் உடன்படுகின்றீரா? இலங்கையில் பாரிய பொறுப்பொன்றினை நிறைவேற்றும் நடைமுறைச் சாத்தியப்பாட்டினை விமர்சித்து மேற்குறித்த கூற்றை ஆய்ந்துரைக்க. உமது விடையினைப் பொருத்தமான தீர்ப்புச் சட்ட எடுத்துக்காட்டுக்களினால் ஆதாரப்படுத்துக.

06. Hobbes மற்றும் Locke இன் கொள்கைகளில் (theories) காணப்படுவதனைப் போன்ற சமூக ஒப்பந்தத்தின் அறிமுகமாகிய கொள்கையினை (familiar theory) Rawls பொதுமைப்படுத்தி அதிகளவான சுருக்கத்திற்குக் கொண்டு செல்கின்றார் எனக் கூறப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாரம்பரிய சமூக ஒப்பந்த கொள்கைகளுடன் ஒப்பிட்டு Rawls இன் சமூக ஒப்பந்தக் கொள்கையில் அரசின் வகிபங்கினை அவரது 'நீதி' தொடர்பான கருத்தாக்கத்துடன் தொடர்புபட்டதாக ஆய்ந்துரைப்பதுடன் அது நியாயம் மற்றும் நீதியினை மேன்மைப்படுத்துகின்றதா என ஆராய்க.

*****

(வினா ஒவ்வொன்றும் மொத்தமாக 100 புள்ளிகளுக்கு மதிப்பிடப்படும்)